27.07.2026

**C. C. No.341/2012**

**அ.சா.2 – முருகன்.**

1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 03.55 பி.ப – 04.07 பி.ப**

தேர்வு கூடத்தில் யார் தேர்வு எழுதினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் தேர்வு கூடத்தில் கண்காணிப்பாளர் கிடையாது. நான் அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, மேலகூடலூர் தலைமை ஆசிரியராக இருந்தேன். என்னிடம் விண்ணப்ப படிவம், hall ticket மாவட்ட கல்வி அலுவலர் காண்பித்தார். அந்த நபரிடம் அவைகள் எவ்வாறு கிடைத்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. விண்ணப்ப படிவம் மற்றும் hall ticketல் யார் ஒட்டினார்கள் என்றால் அது எனக்கு தெரியாது ஆனால், அந்த புகைப்படத்தில் இருந்த மாணவன் செயலரசன். செயலரசன் என்னிடம் 12ம் வகுப்பு அப்பொழுது படித்து கொண்டிருந்தான். அந்த புகைப்படம் எந்த ஸ்டூடியோவில் எடுக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. அந்த விண்ணப்ப படிவம், hall ticketல் என்னுடைய கையொப்பம், முத்திரை இருந்ததா என்றால் முத்திரை இருந்தது ஆனால், என்னுடைய கையொப்பம் கிடையாது. என்னுடைய கையொப்பம் போல் போட முயற்சி செய்துள்ளார்கள். ஆனால், அது எனது கையொப்பத்துடன் ஒத்துபோகவில்லை. பொதுவாக hall ticketன் புகைப்படம் மீது என்னுடைய கையொப்பம் இருந்தால்தான் அது ஏற்க்கப்படும் என்றால் சரிதான். ஆனால், நான் அந்த புகைப்படத்தில் கையொப்பம் போடவில்லை. போலியாக எனது கையொப்பம் போடப்பட்டுள்ளது. அதில் உள்ள முத்திரை எங்களது பள்ளி முத்திரை போல் போலியாக தயாரிக்கப்பட்ட முத்திரையாகும். ரகுவரன் என்ற மாணவனுக்கு பதிலாக செயலரசன் தேர்வு எழுதவில்லை என்றால் சரியல்ல, hall ticketல் பெயர் ரகுவரன் என்று இருந்தது. ஆனால், செயலரசன் புகைப்படம் ஒட்டப்பட்டிருந்தது. நாகமணியம்மாள் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.27 18:48:11 +0530

சி.சி.டி.வி கேமிரா இருந்தது என்றும் தேர்வு கூடத்திலும் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த சி.சி.டி.வி கேமிரா இருந்திருந்தால் யார் ரகுவரன், செயலரசன் தெரிய வந்திருக்கும் என்றால் சரிதான். முத்திரை இல்லாத hall ticket செல்லுபடியாகது என்றால் முத்திரையே போலியாக தயாரிக்கப்பட்டதுதான். நான் சொல்வதுபோல் ரகுவரனுக்கு பதிலாக செயலரசன் எந்த தேர்வும் எழுதவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.27 18:48:17 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 27.07.2026